உ

ஸ்ரீ சித்தி விநாயகர் துணை



# ஸ்ரீ சித்தி விநாயகர்

## சிறு பாமாலை

இயற்றியவர்


**ஆ. நா. விநாயகமூர்த்தி**

அவர்கள்

சேனைக்குடியிருப்பு

கல்முனை.



வெளியீடு: 4

விலை ரூபா 5/



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எஸ். குணரெத்தினம் ஐயா!
# எமக்களித்த அணிந்துரை

பக்தி மலர்ந்த நம் தமிழ் ஈழத்தில் தங்கள் இஷ்ட தெய்வங்களுக்குப் பாமாலை சூட்டுவது புலவர்களது இயற்கைக் குணமாம். கவிஞர் **நா. வினாயகமூர்த்தி** அவர்களும் இந்து சமயத்தவர்கள் வணங்கும் எல்லாத் தெய்வங்களைப் பற்றியும் பாடல்கள் இசைத்துள்ளார். கவிஞர் வினாயகமூர்த்தி அவர்கள் ''பராசக்தி பக்திரசப் பாமாலை'' என்னும் நூலை பராசக்தியின் பேரிலும் 'சரவணபவசண்முகமாலை' என்னும் நூலை ஸ்ரீ முருகன் பேரிலும் 'புயல்காவியம்' என்னும் நூலையும் தற்போது 'ஸ்ரீ சித்தி வினாயகர் சிறுபாமாலை' என்னும் இச்சிறு நூலை அடியார்களின் நெஞ்சத்திற்குச் சமர்ப்பித்துள்ளார்.

இவரது கவித்துவம் மேன்மேலும் வளர இறைவனை வேண்டி எனது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வண்ணம்

**சி. குணரெத்தினம்**
ஓய்வு பெற்ற அதிபரும்
கிராமோதய சபைத் தலைவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு - மிகுந்து வரும்
வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ
துள்ளியோடும் தொடர்ந்த வினைகளே

கஜமாமுகனைக் கருத்தில் நினைந்து
அவனே அனைத்தும் அருளைக் கொடுக்கும்
பயமேதகற்றும் பாரினில் வாழ
உலையாம் பணிய ஒளியை அருள்வாய்

அருள்வாய் அயனே ஐங்கரக் கையோய்
உருவாய் உமையின் உற்றநற் புதல்வா
பெருவயிற்றுடைய பிள்ளையே விநாயகா
கருவினில் நினைத்து கைசிரம் வாழ்த்துவாம்

முக்கனி விரும்பும் மூசிக வாகனா
அக்கனி ஒன்றுடன் அன்னையைத் தெய்வமாய்
சொக்கனைச் சுற்றியே தோத்திரம் செய்தவா
இக்கணம் எம் எதிர் எழுந்தருள் செய்குவாய்

அன்பு கருணை அடக்கம் தருவாய்
நட்பாய் உன்மீது நாட்டம் கொண்டிட
இன்பம் இல்லறம் இனிது வாழ்க்கையும்
அன்பாய்க் கணேசனே ஆசிதந்தருள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை:-

அன்புடையீர்,

இவ் வையகத்தின் விநாயகப் பெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபட்ட நமது முன்னோர் இவர் புகழ்பாடி எல்லையற்ற முத்தி பெற்று இறைவனடி அடைந்தனரென அறிகின்றோம் பெரியோர்களே.

இக்கலியுகத்தின் கணேசப் பெருமான் பல திரு நாமங்களோடு சில கிராமங்களிலும் பற்பல இடங்களிலும் வீற்றிருந்து தன்னை அண்டிவரும் அடியார்க்கு அருள் பாலிக்கின்றார். எனவே அடியார்களே நமது அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் அல்லல்வினையை அகற்ற வல்லோனாகிய சிறி சித்தி விநாயகர்மீது கொண்ட பக்திப் பரவசத்தால் இப்பாடல் உதித்தன. ஆகவே தாங்களும் அவர் புகழ்பாடிப் பணிகுவீரென கேட்டுக்கொண்டு இப்பாமாலை நூல்வடிவில் ஆக்கம் பெற உதவிய சம்மாந்துறை சிறிவிநாயகர் ஆயுள்வேத வைத்திய நிலைய வைத்தியமணியும் மாந்தரீகருமாகிய ஸ்ரீமான் க. சின்னத்தம்பி என்பவருக்கு என்பெருமான் அருளும் கடாட்சமும் அன்புக் கருணையும் பொருளும் புவிவாழ் நீடாயுளும் இறையின் பக்தியும் இப்பணிவளரவும் வாழ்த்தி இப்பாமாலையை இன்னவர்க்கே சூடுகின்றேன்.

திருமகன் சித்தி முத்தி ஸ்ரீ விநாயகர் மீதில் பாடல்
அருமை சேர் இயற்றிப்பாடி அலைந்து நான் திரியும் போது
கருணைமா கடலாம் சின்னத் தம்பிகையேற்று ஆக்கம் தந்து
பெருமகன் தனக்கேபிள்ளை - மாலையைச் சூடுகின்றேன்

உள்ளமும் கண்டேன் வெள்ளை - உரைத்தலும் கண்டேன் காளி
அம்மையைப் போற்றிப்பாடும் அழகினைக் கண்டேன் யாரும்
வெள்ளமாம்மாந்தரீகர் மேவிடும் ஆயுள்வேத
வைத்தியர் சின்னத்தம்பி வளர்க இச்சேவை மேலாம்

அன்புடன் ஊக்கம் தந்த அனைவரைப் புகழ்தல் மேலாய்
நண்பர் பூசாரி பொன்னுத்துரை கிஸ்ணமயிலும் வேலும்
பண்புடை அரசரெத்தின பாலகன் மாணிக்கம் நல்லோன்
இன்பமாய் தனிகா தம்பி பஞ்சலிங்கம் இவர்களை மறவேனன்றே

கானக மயிலுமாட கண்டுவான் ஆடல் என்பார்
நானும் அவ்வழியில் தோன்றி நவின்றனன் கணேசன் மேலே
பாவெனும் மாலை தன்னில் பற்றிற்று பிழைகள் காண்கின்
மாதவப் பெரியோர் தாங்கள் மன்னிக்க வேண்டுகின்றேன்.

இங்ஙனம்

**ஆ. நா. விநாயகமூர்த்தி**
சேனைக்குடியிருப்பு
கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## ஓம் விக்கினேஸ்வராய நம

### துதி

கங்கை அணிந்துழக் காலனை நெஞ்சிற் காலுதைத்தோன்
செங்கையிற் சூலம் மழுவேந்தும் சிவனைத் தினம் தினமும்
அங்கையில் மலர் கொண்டு அர்ச்சித்து அருங்கண்ணீர் சொரிந்து
பங்கையன் பாதம் பணிந்து துதி செய்வாம்.

### காப்பு

முத்தமிழ் தெய்வமான முதல்வனை நினைந்து பாட
தத்துமி நடனமாடு சரஸ்வதி எந்தன் நாவில்
நித்தமும் குடியிருந்து நிலைபெற ஆட்சி தந்து
வைத்து நின் மாலை பாட மாதா நின் சரணம் காப்பே:

### பாடல்

1. அன்னை உமை தன்மகனே ஐயா உன்னை
அ அடிபணிய இருபையது அளித்திடாயோ
முன்னை பொருள் என வந்த முதல்வா சித்தி
முன்னவனே கணநாதா முருகனுக்கு
அண்ணனென அவதரித்த அமலனே நாம்
அன்பு உருகப் பாடிடவே அருகே வா வா
வண்ணமுயர் கவிகள் பல எமக்குத் தந்து
வரமருளக் கணபதியே வருகுவாயே

2 ஆதவன் போல் இருளகற்றி ஒளியே நல்கும்
ஆ அம்மை திரு புவனையுடன் வாலைத் தாயும்
தீது அகலக் குஞ்சரனே சிவாயா சிறியும்
ஓம் றிங் அங்க முக்கோணம் அமர்ந்த தேவா
ஏதொன்றும் நாமறியோம் உம்மைப் பாட
ஏடெடுத்துப் பாரதத்தை எழுதிவைத்த
கோடுடைய கையோனே குழந்தை என்மேல்
குணமாக உனது துதி கூறிடாயே

3 இருளகற்றி ஞானமுடன் இருக்க வா வா
இ என் மனதில் ஐந்தெழுத்தின் நிலையைத் தா தா
அருள்கொண்டு என்னுளும் துதிக்க வா வா
அடியேனின் முன்னிருக்க இப்போ வா வா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடிகொண்ட கொலை களவு தீய எண்ணம்
குஞ்சரனே ஓட்டுமையா நெஞ்சை விட்டு
பிடியானை முகமுடைய பிள்ளையாரே - சுவாமி
பிழை பொறுத்து அடியேனை ஆழுவாயே

4 ஈவிரக்க தாழ்வு மனப்பான்மை தா தா
ஈ எப்பொழுதும் உமைப்பணிய வரத்தைத் தா தா
தூய்மையுடன் உமக்குப் பல தொண்டு செய்து
தொழுது ஏற்ற களிறே என் துரையே வா வா
ஆயகலை அறுபத்து நான்கும் தந்து
அரன்மகனே அன்னமெனும் கொடையும் தா தா
காயமெனும் பொய் வீடு அழியும் முன்னே - சுவாமி
கணபதியே உன் கோலம் காட்டுவாயே

5 உலகளந்தோன் மருகோனே உமையாள் பெற்ற
உ ஒப்பிலா முழுமுதலே அப்பா வா வா
பல கத்கள் கண்ணெதிரே கண்டாலும் கை
பணிவு செய்து கணேசா எனப் பணிய வா வா
வினைவரினும் விக்கினேஸ்வரனே முன்நில்
விளையாடி தத்தி தள்ளாடி வா வா
அணையாத ஒளியே நீர் அனைவோர்க்கும் - சுவாமி
அருள் கொடுக்கும் குணபதியே வருகுவாயே.

6 ஊரறிய இடையர் மனை உறியில் நெய்யை
ஊ ஒன்று விடா தயிர் உண்டு களவு செய்து
பாரறிய பாலகனாய் தாய்மடியில்
பால் குடித்து தேடிவரும் ஆயர் தங்கள்
வாயடைக்க தாய்பேசும் வார்த்தை கேட்டு
மௌனமுடன் தவழ்ந்து எதிர் மண்ணை உண்ட
காயாம் பூ நிறமுடைய கண்ணனின் - சுவாமி
கருத்துடைய மருகோனே காத்திடாயே

7 எம் உயிரே என் கண்ணே என் அருகே வா வா
எ எங்கள் குல முன்னவனே இறைவா வா வா
தங்கமணி, தண்டை சிலம் பொலிக்க வா வா
தாய் தந்தை வலம் வந்த தலைவா வா வா
அங்கையர்கள் ஆலாத்தி கரவையாற்ற
அரோகரா வேழ முகா ஆடி வா வா
மங்கையர்கள் சித்தி முத்தி பகிழ என்முன் - சுவாமி
வரம் கொடுக்கும் விக்கினேஸ்வரா வருகுவாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8 ஏதுகுறை செய்தேனோ முந் ஜென்மத்தில்
ஏ ஏழையான் வறுமை தனில் வாடிச் செத்தேன்
காதடைத்து கண்ணிருட்டி வருகும் வேளை
காப்பாற்றி அன்னமது தருவாரில்லை
பதறுகின்ற குடும்பந்தனைப் பாதுகாக்க
பருகுகின்றேன் உனை நினைந்து வெறும் நீர் ஐயா
அருமையுடன் அந்நீரில் நீடு வாழ - சுவாமி
ஐங்கரனே நிதி தந்து அருள் செய்வாயே

9 ஐயகோ ஆத்துமத்தின் மூலாதாரம்
ஐ ஐம் பூதம் தனையடக்க மருந்து தாரும்
வையகத்தோர் இழிபேசா வரத்தைத் தாரும்
வரகவி இவனனவே மதிக்கப் பாரும்
கையெடுத்து கணேசா என சிரசில் வைத்து
கண் மூடி யான் வணங்க கடைக்கண் பாரும்
தூய்யனே மூப்பழும் விரும்பும் கோவே - சுவாமி
துரைமகனே அருள் ஒளியே தோற்றுவாயே

10 ஒன்றாகி மூன்றாகி ஐந்துமாகி
ஒ ஒளியாகி இருளாகி ஞானமாகி
நின்றாடி தில்லைதனில் உமையாளோடும்
அத்திமிட மதின் மதகரியின் வடிவம் கொண்டு
கண்ணாகிப் பிள்ளையாம் ஈன்ற போதே
கதறிடவே உமையவளும் கையில் தாங்கி
குன்றாத வரம் கொடுத்து கைலைசென்ற - சுவாமி
குணபதியே குழந்தை எனை காத்திடாயே

11 ஓம் எனும் அட்ச்சரத்தில் நடுவில் நின்று
ஓ ஒளி கொடுக்கும் முருககோனின் தமையா அன்று
கானின் வளர் கன்னிதனைக் காதலித்து
கடுங்கிழவனாய்க் கூடி பெருமடுவு தன்னில்
தேனுண்ணும் ஸ்ரீ வள்ளி சினம் பிடித்து
இட்டிபேசி முருகனை விட்டு ஓட
தட்டாது தம்பியர்க்கு கிட்டே வந்த - சுவாமி
தனி யானை முகமுடைய பிள்ளையாரே.

12 ஔவீடும் முதலை தன் வாயில் பட்ட
ஔ ஆமைபோல் ஆனேனே பகையன் நானேன்
கைதனிலே பொருளில்லா கள்ளனானேன்
கானில் வளர் பூமரத்தின் நிலை போலானேன்
பையரவம் இடிசத்தம் கேட்டுப் புற்றில்
பயந்தொழித்த போலே நான் கடனுக்கஞ்சி
நான் கடத்தி வாழ்கிறேன் கணநாதா வா வா - சுவாமி
நம்பி எனை வாழ்விக்க வருகுவாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13 அஃக்கணமே தேவர்களை அடக்கியாண்ட
ஃ ஆண்மை மிக கஜமுகா சூரன் தன்னை
சிக்கணமே அவன் சிரசு துண்டம் செய்து
தேவர் சிறை மீட்டு வைத்த சிவக்கொழுந்தே
முக்கனியும் அப்பம் அவல் சக்கரை தேன்
மூசிகனே மோதகமும் உவந்தளிப்பேன்
பக்கமது நில்லுமையா வறுமை ஓட்டு - சுவாமி
பதம் போற்றி பல பாக்கள் பாடுவேனே

14 சங்கரனும் உமையவளும் உமக்குப் பூசை
ச தந்து செய்து முதற்கடவுளான நேசா
சிங்க முகன் அவுணர் படை சிரசம் துண்டாய்
திரி சூலம் மழுவேந்தும் தீர நேசா
சங்கொலிக்க சேகண்டி மேளமார்ப்ப
தையலர்கள் மலர் சொரிந்து தீப மேற்ற
மெய்யகரி மூசிகன் மேல் ஏறிவந்து - சுவாமி
விநாயகனே வேண்டும் வரம் தருகுவாயே.

15 சாரதியாய் அருச்சுனர்க்குத் தேரை ஓட்டி
சா சங்கமென கீதைதனை உரைத்த மாயோன்
வாசமிகு மருகோனே கணேசா வெற்பை
வயிற்றுடைய கணபதியே வணங்கினேனே
தேசமதில் நானலைந்து தெருவைச் சுற்றி
திராத கவலை கொண்டு வாடுறேனே
பாசமெல்லாம் உன்மீது வைத்தேன் ஐயா - சுவாமி
பாலனெனை காத்து வரம் தந்திடாயே

16 சிற்றெறும்பு நீரதனில் தியங்குமாற் போல்
சி சிறியேன் யான் மாயைதனில் தியங்கலானேன்
பற்பலவே மொழிபேசி பாவை தன்னோடு
பகலிரவு நேரமதைக் கடத்தலானேன்
கற்றறிந்த பெரியோரை மதிக்கா வண்ணம்
கடுஞ் சொல்லால் வைதேனே கண்டிடாது
சொற்பனத்தில் துதிக்கையோடு தோன்றி வா வா - சுவாமி
சொர்ண மயமாய் விளங்கு பிள்ளையாரே

17 சீர்பூத்த மாலைகளும் பதக்கம் மின்ன
சீ சிற்றுடை பட்டுகளும் அரையில் துன்ன
கார்பூத்த கண்களிலே கருணை மின்ன
கையொன்றில் மோதகமும் கருணை காட்ட
பார்போன்ற இருசெவியும் பகைமை போக்க
பாதியொரு கோடுடையோன் பாதத்தண்டை
சீர் போற்றும் வெண் சங்கின் ஓசையோடு -சுவாமி
சிவாய ஸ்ரீ விநாயகனே வருகுவாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18 சுழிமுனையின் நிலைகாணேன் கலையைக் காணேன்
சு சோதியே உனை வணங்காப் பேயன் ஆனேன்
வழிதனிலே முள்ளிட்ட மடையன் ஆனேன்
மதகுருவின் மனம் நோக வைதவனானேன்
பெருமையுடன் பணமதுதான் பெரிதென்று எண்ணி
பேராக வாழ்ந்தேன ஊரார் மெச்ச
அருமையுடன் உனது முகம் கண்டபோது - சுவாமி
அடிமையாய் ஆனேனே ஆளானேனே

19 சூதாடி நளநரசை தோற்றுப் போலே
சூ தோற்றுவைகயா கையிலிருந்த பொருள்களெல்லாம்
நாளுடித் திரிகிறதைப் பல பேர் பார்த்து
நகைக்கிறது கண்டே நீ சிரிக்கின்றாயோ
தாலாட்டி வளர்த்த என் தாயும் கூட
தம்படியும் என்னிடத்தில் இல்லையென்றான்
போராடி அவுணர் படை வென்ற வீரா -
பொற்பால விளையகனே வருகுவாயே

20 செந்திருவே கணநாதா சிவனார் பாலா
செ தீராத நோய்களெல்லாம் தீர்க்கும் தீரா
மந்திரமாம் பர்வதத்தை ஏடாய்க் கொண்ட
மதகரியே வாரணனே வா வா என்முன்
அந்தரத்தில் உயிர்பிரிந்து போகும் போது
ஆனைமுகா உம்மிடத்தில் அவையமார்க்கு
பந்தமெனக் உமைத்தவிர ஒருவரில்லை - சுவாமி
பழம் பொருளே மாணிக்கப் பிள்ளையாரே

21 சேராட கணநாதர் தேவராட
சே திற்குள்ள பாலகர்கள் முனிவராட
தேராட பூச்சரங்கள் தானின்றாட
தேவரம்பை ஊர்வசியும் தினமுமாட
சோராட தும்பிக்கை தூங்கியாட
துதித்திடும் அடியவர்கள் துள்ளியாட
பாராட பவளமணி ஊஞ்சலாடி - சுவாமி
பாலக விளையகனே வருகுவாயே

22 சைவத்தின் முதற் பொருளே சத்தி சித்தி
சை தான் கொடுப்பாய் உமைத் துதிப்போர் தமக்கு
வையகத்தில் நினைப்பதற்கு வறுமையோட்டு
வாரணனே உம்மிடத்தில் அடிமையானேன்
பையரவம் பகைமையொடு கிரகதோஷம்
பகையாதே உமை நினைந்து அட்சித்தாலே
கையெடுத்து கும்பிட்டுக் குட்டிக் கொண்டேன் - சுவாமி
காருமையா கணநாதனைப் பிள்ளையாரே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23 சொக்கனைப் பிட்டுண்டு மண்ணுக்காக
சொ தொடுதெஞ்சி விஷமுண்டு தேவர்க்காக
பக்கமுறை பார்வதிக்கு விருத்தனுக
பார்த்திபன் போர் தொடுத்து பன்றிக்காக
தக்கனுக்கு நல்லவரம் ஈந்தோன் மைந்தா
தயாபரனே தாண்டியடி உறையும் தேவே
திக்கெங்கும் உன்நாமம் வழங்குதையா - சுவாமி
சிறிபால சிந்தாத்துரைப் பிள்ளையாரே

24 சோதிவடிவான சிவலிங்கம் தன்னை
சோ துலங்கு மகா இராவணனும் கொண்டு போக
பாதிவழி மீதினிலே எதிரே சென்று
பாங்காகத் தரைமீது இறக்கி வைத்து
நீதியாய் அன்னவர்க்கு மாற்றம் சொன்ன
நித்த பரிபூரணமே சித்தம் வைத்து
அத்தனே குளக்கரையில் அமர்ந்ததேவே - சுவாமி
அமலனே அம்பாரைப் பிள்ளையாரே

25 சௌநரப்பு எலும்பு தோல் தசையுமான
சௌ சடலத்தை நான் வளர்த்து என்ன கண்டேன்
செவ்வையுடன் உனது திருப்பாதம் தன்னை
தினம் போற்றிப்பணியாத மிருகமானேன்
மண்ணுண்டு போகுமுன்னும் மனதில் கொண்ட
மாசற்ற இருளகல வரத்தைத் தரும்
கண்ணெதிரே காட்சி தர வா வா ஐயா - சுவாமி
கணேசனே மாமாங்கப் பிள்ளையாரே

26 ச்சை கொண்டு உன்மீது இரந்து பாட
இந்திரரும் தேவர்களும் இங்கே கூட
பச்சவர்ணத் தேர்மீது பவனி வந்து
பாவியெனைக் காத்து வரம் தந்திடாயோ
அச்சமற ஆதுமத்தின் அரையின் காலின்
ஐங்கரனே நீர்கலக்கின் ஆவிபோகும்
இச்சை கொண்டேன் இரண்டறக்கலக்கவாவா - சுவாமி
என்குருவே சிவக்கொழுந்தே இறைஞ்சுவேனே

## வாழ்த்து

மழை பொழியப் பசுவினங்கள் மகிழ்ந்து வாழ
மால் அரனும் உமையவளும் மயிலும் சேவல்
கொடிவள்ளி தெய்வானைக் குமரன வாழ்க
கோயில்களும் வாவிகளும் குளமாய் வாழ்க
தாழ்பணிவு சிவசமயம் தழைத்து வாழ்க
தமிழறிவு தந்தகலை வாணி வாழ்க
ஆழ்கடலில் வாழ்முத்து விநாயகந்தாள்
அனுதினமும் வாழ்கவென வாழ்த்திவேனே

சுபம்

---

சிறிசித்தி விநாயகர் சிறுபாமாலை

முற்றிற்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் கணபதே

விக்கின விநாயகனே ஓம் கணபதி ஓம்
வேளமுகத்தைதங்கரனே ஓம் கணபதி ஓம்
வேதமுதற் பொருளே ஓம் கணபதி ஓம்
வேதாந்த தத்துவனே ஓம் கணபதி ஓம்
தத்துவத்தின் போதகனே ஓம் கணபதி ஓம்
சாம்பசிவன் தன்மகனே ஓம் கணபதி ஓம்
சக்தி உமை பெற்றவனே ஓம் கணபதி ஓம்
சங்கரனின் பாலகனே ஓம் கணபதி ஓம்
முக்கண்ணனின் கண்மணியே ஓம் கணபதி ஓம்
மூசிக வாகனனே ஓம் கணபதி ஓம்
வடிவேலர்க்கு மூத்தவனே ஓம் கணபதி ஓம்
வரமருள வந்திடுவாய் ஓம் கணபதி ஓம்
விக்கினங்கள் தீர்ப்பவனே ஓம் கணபதி ஓம்
விகட சிகட குணபதியே ஓம் கணபதி ஓம்
சக்திக் கணபதியே ஓம் கணபதி ஓம்
சரிந்த வயிற்றோனே ஓம் கணபதி ஓம்
முக்தி எமக்கழிப்பாய் ஓம் கணபதி ஓம்
முத்தமிழின் முன்னவனே ஓம் கணபதி ஓம்
சித்தி முத்தி யானவனே ஓம் கணபதி ஓம்
உன் சீர்பாதம் யாம் மறவேன் ஓம் கணபதி ஓம்
கங்கைக் கரிமுகனே ஓம் கணபதி ஓம்
உன் கழலடியை நான்மறவேன் ஓம் கணபதி ஓம்
தத்தி விளையாடியெதிர் ஓம் கணபதி ஓம்
தாவோடி வாருமையா ஓம் கணபதி ஓம்
தேங்காய் அவல் பயறு ஓம் கணபதி ஓம்
தினமும் படைத்திடுவேன் ஓம் கணபதி ஓம்
மாங்கனியும் தேன் கதலி ஓம் கணபதி ஓம்
மகிழ்ந்து உமக்களிப்பேன் ஓம் கணபதி ஓம்
சர்க்கரை தேன் நெய்யுடனே ஓம் கணபதி ஓம்
தாமரைப் பூ சூட்டிடுவேன் ஓம் கணபதி ஓம்

## கணபதி வா வா

வாவா சிவ குஞ்சரியே வா வரம்பல தரவே கணபதி வா
தேவா முன்னவ சிகாமணியே
தெரிசனே தரவே கணபதி வா

தாதா வரங்கள் பலவே தா தன் மொழியானை முகனே வா
வேதாமாயோன் மருகனே வா
வேண்டிக் கருணை பலவே தா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பழம் விரும்பும் மூசிகனே மூவர்கள் தேவர் பணிவோனே
அப்பனை அம்மையை வலம் வந்தே
அருங்கனி பெற்ற ஐங்கரனே

விக்கினம் தீர்க்கும் விநாயகனே வேலர் தமக்கு மூத்தோனே
முக்கணனரிடை முன்னவனே
மூதவ தாண முப்பொருளே

தும்பிக்கையான சுந்தரனே தொடரும் வினைபல தீர்ப்பவனே
தம்பிளவர்க்கருள் நாயகனே
தமது கரிமுகக் கணபதியே

## ஏர்முனைக்கு — எ - மெட்டு

ஆனைமுகத்தைங்கரனைத் தொழுதிடுவோமே - அவரை
அனுதினம் பகலிரவாய் நினைந்திடுவோமே
தீராத வினைகளெல்லாம் தீர்த்திடுவாராம் - அவர்க்கு
சித்தி முத்தி என்னும் இரு மங்கையருண்டாம்
காரானை மான்முகனும் கந்தனுக்கு மூத்தோன் எங்கள்
கணபதியை அனுதினமும் பணிந்திடுவோமே - ஆனை

நெற்றியில் திருநீறணிவோம் பக்திபக்தியதாய் - அன்
நீறுனிலே எத்தனையோ முக்தி முக்தியுமாம்
முத்திதரும் ஐங்கரனை முழுமனத்தோடு - வணங்கி
மூன்றுதரம் குட்டிடுவோம் தலையில் தப்பாது - ஆனை

இறைவனை யாம் வணங்குதற்கு ஏன் தயக்கமோ - நம்
இனியதமிழ் தெய்வமது எமது பக்கமே
கனிவுகொண்டு அனைவருமே கைகுவித்தாலே - எம்மை
காத்திடுவார் கணேசனை நாம் போற்றிடுவோமே - ஆனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன் மொழிகள்

1. உங்கள் உதடுகள் மூடட்டும். உள்ளம் திறக்கட்டும்.

2. எழுந்திரு! விழிப்படை! லட்சியம் நிறைவேறும் வரை நிற்காதே. செயலாற்று.

3. என்னருமை சிறுவர்களே! தைரியத்தைக் கடைப்பிடியுங்கள். வெற்றி உங்கள் காலடியில் வந்து விழும்.

4. உன் உடம்பை, அறிவை, உணர்வை பலவீனப்படுத்தும் எதையும் விஷமெனக் கருதி தள்ளிவை.

5. பிறர்வாழ வாழ்வாரே வாழ்வர்! மற்றவர்கள் எல்லாம் உயிரிருந்தும் செத்தவர்களே!

6. திடங்கொள்! தைரியமாய் இரு! மனிதன் மரிப்பது ஒருதரமே! என் சீடர்கள் கோழையாய் வாழக்கூடாது நான் வெறுப்பது கோழைத்தனத்தையே.

7. என் அருமை வாலிப நண்பர்களே! திடமாக இருங்கள். அதுவே நான் கூறும் ஆலோசனை! தைரியமே உலகம் உய்ய உயர்ந்த மருந்து!

8. வீரர்கள்தான் நாட்டிற்குத் தேவை. வீரராய் கற்பாறைபோல் உறுதியாய் நில்லுங்கள். வாய்மை எப்பொழுதும் வெற்றி பெறும்.

9. கடவுளை புத்தகங்கள் காட்டித்தராது ஆனால் அறியாமையைப் போக்கும். மறைமுகமாய் நன்மை பயக்கும்.

10. மனிதர்களே சிறந்த ஆலயம். அதை விட்டு வெளியே கடவுளைத் தேடாதீர். பயனில்லை.

சுவாமி விவேகானந்தர்

(வாலிபர்களுக்கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org